செ.வெ.எண்: 05 / மார்ச்  நாள்: 03.03.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பில் 04.03.2016 அன்று மாணவ, மாணவியர்களுக்கான தொழில் நெறி வழிகாட்டுதல் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் திரு.ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பில் 2016-ஆம் ஆண்டு மார்ச் 04-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணியளவில் கீழக்கரை செய்யது ஹமீதா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவ, மாணவியர்களுக்கான தொழில் நெறி வழிகாட்டுதல் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. இக்கண்காட்சியை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திறந்து வைத்து விழா பேருரையாற்ற வருகைபுரிய உள்ளார்கள். இவ்விழாவில் கல்லூரி முதல்வர், அரசு அலுவலர்கள் மற்றும் பல்துறை வல்லுநர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள். எனவே இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து கல்லூரி மாணவ, மாணவியர்களும் இக்கண்காட்சியில் கலந்து கொண்டு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**